ஆகஸ்ட் 2013

# கற்போம்

தொழில்நுட்ப மாத இதழ்

## எஸ்.எம்.எஸ் மூலம் IRCTC-யில் டிக்கெட் புக்கிங்

IRCTC

Freedomusertech.blogspot.com

## ஆண்ட்ராய்ட் 4.3 வசதிகள் & சாதனைகள்

## ஜிமெயிலின் புதிய இன்பாக்ஸ்

## SMS மூலம் IRCTC-யில் TICKET புக் செய்வது எப்படி ?

பிரபு கிருஷ்ணா




IRCTC-யில் ஆன்லைன் மூலம் டிக்கெட் புக் செய்ய விரும்புவர்களுக்கு பெரிய தொல்லை அதன் வேகம். அனைத்து இந்தியர்களுக்கும் ஒரே சர்வர் மூலம் டிக்கெட் புக் செய்யும் வசதி வழங்கப்படுவதால் மெதுவாக இருக்கும் புக்கிங் சேவையை வேகமாக்க இன்னொரு வசதியை கொடுத்துள்ளது IRCTC. தற்போது நீங்கள் உங்கள் போனில் இரண்டே இரண்டு SMS மூலம் டிக்கெட் புக் செய்து விடலாம். எப்படி என்று பார்ப்போம்.

**தேவையானவை:**

1. மிக முக்கியமாக வங்கிக்கணக்கு மற்றும் IRCTC Account இருக்க வேண்டும்
2. நீங்கள் புக் செய்ய பயன்படுத்தும் மொபைல் நம்பர் IRCTC & Bank இரண்டிலும் Register செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. பேங்க்கில் இருந்து MMID, OTP (One Time Password) போன்ற தகவல்களை நீங்கள் பெற வேண்டும்.

4. OTP என்பது One Time Password என்பதால் ஒரு முறை மட்டுமே இதை நீங்கள் பயன்படுத்த முடியும். எனவே இதை எப்படி தொடர்ந்து பெறுவது என்பதை உங்கள் வங்கியில் கேட்டுக் கொள்ளுங்கள். சில வங்கிகள் சில வழிமுறைகளை பின்பற்றுகின்றன. அதனை அறிய - [How to generate OTP]

இவையே தேவையானவை. இதில் ஒன்று இல்லை என்றாலும் உங்களால் டிக்கெட் புக் செய்ய இயலாது.

தற்போது எப்படி டிக்கெட் புக் செய்வது என்று பார்ப்போம்.

முதலில் கீழே உள்ளது போன்ற SMS – ஐ 139 அல்லது 5676714 என்ற எண்ணுக்கு அனுப்ப வேண்டும்.

BOOK <TrainNo> <FromCity> <ToCity> <TravelDate(DDMM)> <Class> <Passenger1-Name> <Age> <Gender> <Passenger2-Name> <Age> <Gender> (Upto 6 passengers)

உதாரணம்:

*BOOK 16232 SBC TPJ 1307 SL Prabu 24 M  Prabha 24 F*

நீங்கள் மேலே உள்ளது போன்று சரியான பட்சத்தில் அனுப்பினால் உங்களுக்கு 139 இல் இருந்து ஒரு SMS வரும்.

Trans Id: 12345678 Ticket Amount: 460 IRCTC SC: 11.24 Total Amount: 461.24 Seat: AVAILABLE-240. For Payment SMS PAY <34004567> IMPS <MMID> <OTP> IRCTCUserID to 139 to book ticket.

இப்போது டிக்கெட்க்கு பணம் செலுத்த வேண்டும். இதற்கு கீழே உள்ள வழிமுறையை பின்பற்றவும்.

PAY <Transaction ID as received> IMPS <MMID as received from bank> <OTP as received from bank for this transaction> <IRCTCUserID>

உதாரணம்:

*PAY 12345678 IMPS 98765432 271089 prabu2710*

இதையும் சரியாக அனுப்பும் பட்சத்தில் உங்களுக்கு பின் வரும் SMS வரும்.

> Your ticket booked successfully. PNR is: 10101010 Ticket No: :1234567890 Booking Status: Prabu CONFIRM S7 1 WS Prabha CONFIRM S7 4 WS Ticket Amt: 460.0 SC: 11.24 Src: Bangalore CY JN Dst: Tiruchchirapali Date of Journey: 13/07/2013 Sch Dep 19:05 hrs

## டிக்கெட்டை Cancel செய்வது எப்படி?

கஷ்டப்பட்டு புக் செய்த டிக்கெட்டை கான்செல் செய்ய மாட்டீர்கள் இருப்பினும் எப்படி என்று சொல்லி விடுகின்றேன்

### 1. டிக்கெட் முழுமையாக கான்செல் செய்ய

கீழே உள்ளது போன்று SMS ஐ 139 க்கு அனுப்புங்கள்

> CAN <10 Digit PNR> <IRCTC UserID>

உதாரணம்

*CAN 10101010 prabu2710*

இப்போது கீழே உள்ளது போன்ற ஒரு SMS உங்களுக்கு வரும்.

> We have received your request for cancellation of tickets for < Passenger 1 Name> for PNR Number 10101010. Please confirm the cancellation by sending YES to 139 or for any change in cancellation data, send a fresh request.

இதை உறுதி செய்ய YES என்று 139 க்கு அனுப்ப வேண்டும். இப்போது உள்ளது போன்ற SMS வரும்.

> Your ticket for <Passenger 1 Name> with PNR Number: 10101010 is cancelled. Amount: 400 will be refunded in your account.

### 2. குறிப்பிட்ட நபர்களின் பயணத்தை மட்டும் கான்செல் செய்ய

சில சமயங்களில் 4/5 நபர்களுக்கு புக் செய்து விட்டு யாரேனும் ஒருவர் மட்டும் வரவில்லை என்றால் அவர்கள் Ticket – ஐ மட்டும் கூட நீங்கள் கான்செல் செய்யலாம்.

இதற்கு கீழே உள்ள வழிமுறையை பின்பற்றி 139 க்கு SMS அனுப்பவும்.

| |
|---|
| CAN <10 Digit PNR> <IRCTCUserID> <Passenger Number> |

உதாரணம்

*CAN 10101010 prabu2710 12 (Upto 6 Passengers)*

இதற்கு ஒரு SMS உங்களுக்கு வரும்

| |
|---|
| We have received your request for cancellation of tickets for < Passenger 1 Name> for PNR Number 10101010. Please confirm the cancellation by sending YES to 139 or for any change in cancellation data, send a fresh request. |

இதை உறுதி செய்ய YES என்று 139 க்கு அனுப்ப வேண்டும். இப்போது உள்ளது போன்ற SMS வரும்.

| |
|---|
| Your ticket for <Passenger 1 Name> with PNR Number: 10101010 is cancelled.<br>Amount: 400 will be refunded in your account. |

அவ்வளவே ☺

# ஆண்ட்ராய்ட் 4.3 JELLY BEAN வசதிகள் மற்றும் சாதனைகள்

பொன்மலர்

கூகிள் தனது ஆண்ட்ராய்ட் ஜெல்லி பீன் 4.2 இயங்குதளத்தை அப்டேட் செய்து புதிய பதிப்பாக 4.3 வெளியிட்டிருக்கிறது. இதனை Chrome & Android க்கான தலைமை அதிகாரியான சுந்தர் பிச்சை இரண்டு நாட்களுக்கு முன் வெளியிட்டார். மேலும் இது மட்டுமின்றி புதிய Nexus 7 டேப்ளட் மற்றும்

Chromecast என்ற புதிய கருவி போன்றவற்றையும் அறிவித்தார். சரி ஆண்ட்ராய்ட் 4.3 பதிப்பில் என்னென்ன வசதிகள் என்று பார்ப்போம்.




1. Restricted Profiles - ஒரே மொபைல் அல்லது டேப்ளட்டில் (Tablet PC) பல பயனர்களை (Users) உருவாக்கலாம். இதன் மூலம் அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட தகவல்கள், பயன்பாடுகளை (Apps) மட்டுமே பார்க்கவும் பயன்படுத்தவும் முடியும். உங்கள் மொபைலை அல்லது டேப்ளட்டை குழந்தைக்குக் கொடுக்கிறீர்கள் எனில் என்ன பார்க்க வேண்டும் என நாம் கட்டுப்படுத்தலாம்.

2. Bluetooth Smart – இந்த வசதி குறைவான மின்சக்தியில் அதிக நேரம் மற்ற புளூடூத் சாதனங்களோடு இணைந்திருக்க வழி செய்கிறது. மேலும் தொழில்நுட்பத்தில் புதிய வரவுகளான Smart Watch களுடனும் இணைய முடியும்.

3. OpenGL ES 3.0 – இந்தத் தொழில்நுட்பம் ஆண்ட்ராய்டில் உயர்தரமான 2D மற்றும் 3D கிராபிக்ஸ் வசதியினை அளிக்கிறது. எனவே நீங்கள் High Performance விளையாட்டுகளை விளையாட முடியும்.

4. Dial-pad auto complete - குறிப்பிட்ட நபருக்கு டயல் செய்யும் போது தானாகவே முழு மொபைல் நம்பரும் வருகிற மாதிரியான வசதி

5. இயங்குதளம் முன்பை விட விரைவாக இயங்கும்படி

மேம்படுத்தப்பட்டுள்ளது.

6. மேலும் ஹிந்தி, அரபிக் உட்பட சில மொழிகளுக்கான ஆதரவு.




**ஆண்ட்ராய்டு புள்ளிவிவரங்கள் - சாதனைகள்**

• Google Play வில் உள்ள Apps களின் எண்ணிக்கை 1 மில்லியனைத் தாண்டியது.

• மொத்தம் 70 மில்லியன் டேப்ள்ட்களில் ஆண்ட்ராய்ட் ஆக்டிவேட் செய்யப்பட்டுள்ளது.

• Google Play விலிருந்து 50 மில்லியன் Apps டவுன்லொடு செய்திருக்கிறார்கள். கடந்த வருடம் மட்டும் 20 மில்லியன் டவுன்லோடுகள்.

• உலகில் வாங்கப்படும் இரண்டு டேப்ளட்களில் ஒன்று ஆண்ட்ராய்டு

• ஆண்ட்ராய்ட் டேப்ளட்களில் Nexus Tablet கள் மட்டும் 10 சதவீதம்.

• டெவலப்பர்களுக்கான வருமானம் 2.5 மடங்கு அதிகரிப்பு.

இதிலிருந்து ஆப்பிள் iOS ஐ விட ஆண்ட்ராய்ட் இயங்குதளத்தின் வளர்ச்சி அதிகரிப்பதை அறியலாம். ஆண்ட்ராய்டு 4.3 ஜெல்லி பீன் இயங்குதளம் புதிய Nexus 7 Tablet இல் தானாகவே வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மற்ற Nexus 4, Nexus 7, Nexus 10 போன்றவைக்கு அப்டேட் மூலம் கிடைக்கும். சோனியும் தனது Xperia Z, ZL, ZR, SP, Z Tablet போன்றவைக்கு அப்டேட் அறிவித்துள்ளது.

## ஜிமெயிலின் புதிய இன்பாக்ஸ்

பிரபு கிருஷ்ணா

புதிய புதிய வசதிகளை அவ்வப்போது அறிமுகம் செய்து தனது பல பயனர்களுக்கு இன்ப அதிர்ச்சியையும், சில பயனர்களுக்கு துன்ப அதிர்ச்சியையும் தருவது ஜிமெயில் மட்டுமே. அவ்வகையில் தற்போது வந்துள்ள புதிய வசதி உங்கள் ஜிமெயில் இன்பாக்சை Category ஆக பிரித்துக் கொள்ளும் வசதி. இது பலனுள்ளதா இல்லையா என்பதை பதிவில் காண்போம்.

நாம் நம் மின்னஞ்சல் முகவரியை பல தளங்களில் தருகிறோம். அவற்றில் இருந்து நமக்கு அடிக்கடி மின்னஞ்சலும் வரும். முன்பு இவை எல்லாமே ஒரே பகுதியில் வந்து மிக அதிகமான மின்னஞ்சல்கள் படிக்கப்படாமல் இருக்கும். தற்போது வந்துள்ள புதிய இன்பாக்ஸ் மூலம் உங்களுக்கு வரும் மின்னஞ்சல்களை ஐந்து Category ஆக பிரித்து வைத்துக் கொள்ளலாம். கீழே உள்ள படத்தை பாருங்கள்.




Primary: ஒரு குறிப்பிட்ட நபரிடம் இருந்து வரும் மின்னஞ்சல்கள் இந்த Category – க்குள் வரும்.

Social: Facebook, Google+ போன்ற Social Network தளங்களில் இருந்து வரும் மின்னஞ்சல்கள் இதில் இருக்கும். பெரும்பாலும் நீங்கள் அந்த தளங்களில் Register செய்து இருப்பீர்கள்.

Promotions: ஆன்லைன் மூலம் பணப்பரிவர்த்தனை செய்யும் தளங்களில் இருந்து வரும் Offer-கள் இதில் இருக்கும். இவற்றை மார்கெட்டிங் மின்னஞ்சல்கள் என்று சொல்லலாம்.

Updates: நீங்கள் ஏதேனும் தளத்தை தொடர்பவர் என்றால் அதிலிருந்து வரும் மின்னஞ்சல்கள் இதில் வரும்.

Forums: ஆன்லைன் குரூப், Forums போன்றவற்றில் இருந்து வரும் மின்னஞ்சல்கள் இதில் இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட மின்னஞ்சலை ஒரு Category-இல் இருந்து மற்றொன்றிற்கு மாற்ற அதை Drag செய்து தேவையான Category-இல் சென்று Drop செய்துவிட்டால் போதும். Drop செய்த பின்னர் எதிர்காலத்தில் அதே Category வரவேண்டுமா என்பதற்கு Yes என்று கொடுத்து விடுங்கள்.




**இந்த வசதி வராதவர்களுக்கு:**

உங்கள் ஜிமெயில் கணக்கில் Settings Gear ஐகான் மீது கிளிக் செய்து Configure Inbox என்பதை தெரிவு செய்தால் இந்த வசதி வரும். ஏற்கனவே வந்து மூன்று Category மட்டும் இருக்கும் நபர்களும் இதில் மற்ற இரண்டையும் Enable செய்து கொள்ளலாம்.




**இதை Disable செய்வது எப்படி?**

Settings Gear Icon மீது கிளிக் செய்து Configure Inbox என்பதில் Primary தவிர மற்ற அனைத்து Category – களையும் Uncheck செய்து Save செய்து விடுங்கள். இந்த வசதி மறைந்து  விடும்.

இது பலருக்கு ஆரம்பத்தில் குழப்பத்தை தரலாம். அதனால் தான் மேலே துன்ப அதிர்ச்சி என்று சொன்னேன் 😐 . கொஞ்சம் நாட்கள் ஆனால் சரி ஆகிவிடும்.

இந்த வசதி மொபைல் மூலம் ஜிமெயில் பயன்படுத்தினாலும் கிடைக்கும்.

## WINDOWS 7-இல் STARTUP SOUND-ஐ DISABLE செய்வது எப்படி ?

பிரபு கிருஷ்ணா

Windows கணினிகளை ON செய்யும் போது Desktop க்கு வரும் வேளையில் Startup Sound என்று ஒரு Default Sound வருவதுண்டு. நிறைய பேருக்கு அதில் விருப்பம் இல்லை. இன்றைய பதிவில் அதை எப்படி Disable செய்வது என்று பார்ப்போம்.

1. முதலில் Start Menu >> Control Panel செல்லவும்

2. தற்போது Hardware and Sound என்பதை கிளிக் செய்து வரும் பகுதியில் Sound என்பதை கிளிக் செய்யுங்கள். உங்கள் View By Settings பொறுத்து சில சமயங்களில் Control Panel ஓபன் செய்தவுடன் நேரடியாக Sound இருந்தால் அதையும் ஓபன் செய்யலாம்.




3. இப்போது கீழே உள்ளது போல ஒரு Pop-up விண்டோ உங்களுக்கு வரும்.




3. தற்போது Sounds என்ற Tab மீது கிளிக் செய்து **"Play windows Startup Sound"**என்பதை Uncheck செய்து விடுங்கள். பின்னர் Apply செய்து OK கொடுத்து விடுங்கள்.




இது Windows 7 மற்றும் Windows Vista ஆகியவற்றில் வேலை செய்யும்.

# சிறந்த 5 கூகிள் ரீடர் மாற்று தளங்கள்

பொன்மலர்

கூகிளின் RSS சேவையான Google Reader கடந்த ஜூலை 1 ந்தேதி நிறுத்தப்பட்டு விட்டது. ரீடர் மூலமாக பிடித்த தளங்களைப் படித்து வந்தவர்களுக்கு மாற்று தளங்களை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கே சிறந்த 5 கூகிள் ரீடர் மாற்று தளங்களைக் குறிப்பிடுகிறேன்.

1. Feedly Reader

கூகிள் ரீடர்க்கு சிறந்த மாற்று தளமான இது Cloud based இல் இயங்குவதால் எதிலிருந்தும் இந்த தளத்தை அணுகலாம். எளிமையான தோற்றம், விரைவாக புதிய தளங்களைச் சேர்க்கும் வசதி, ஒரே கிளிக்கில் குறிப்பிட்ட Category களில் தளங்களை சேர்க்கும் வசதி, Facebook, Twitter போன்ற தளங்களில் பகிரும் வசதி, பல வகையான தோற்றங்களில் (magazine,headline,cards) தளத்தைப் பார்க்கும் வசதி போன்றவை இதனை முதலிடத்தில் வைக்கிறது.




இந்த தளத்தில் Import OPML என்ற இடதுபக்க மெனுவை கிளிக் செய்து முதலில் டவுன்லோடு செய்த Google Reader Zip கோப்பை Extract செய்து Subscription.xml கோப்பை அப்லோடு செய்தால் உங்களின் பழைய ரீடர் தளங்கள் இதிலும் வந்துவிடும்.

2. [Digg Reader]




இந்த சேவை பிரபல செய்தி மற்றும் சமூக வலைத்தளமான Digg நிறுவனத்தால் புதியதாக தொடங்கப்பட்டதாகும். Feedly யைப் போலவே எளிமையான தோற்றம் ஆனால் சில குறைவான வசதிகள். Digg இதில் unread count, mark as unread போன்ற புதிய வசதிகளை அப்டேட் செய்து கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

3. [The Old Reader]




கூகிள் ரீடர் தளத்தின் வண்ணங்கள், இடைமுகம் போன்றே இந்த தளமும் தோற்றத்தில் ஒத்திருக்கிறது. இதில் Find Friends மூலமாக நண்பர்களை Following செய்யலாம். மேலும் பிரபல பதிவுகளை Trending இல் பார்க்கலாம்.

4. [Curatta Reader.]




அழகான தோற்றத்துடன் இருக்கும் தளம். மற்ற தளங்களைப் போல பதிவுகளை நெருக்கியடித்து காட்டாமல் அளவான இடைவெளியுடன் பிரிக்கப்பட்டு காண்பிக்கிறது. இவர்களும் Unread posts only வசதியை அப்டேட் செய்வதாக அறிவித்துள்ளனர்.

5. [AOL Reader]




இந்த தளம் பிரபல அமெரிக்க மீடியா நிறுவனமான AOL Company ஆல் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட தளமாகும். இதில் card view, full view, split view போன்ற பல வகையான display அமைப்புகள் இருக்கின்றன. மேலும் Facebook, Twitter, Google கணக்கிலிருந்தே புதிய AOL reader கணக்கினைத் தொடங்கலாம். தற்போது சோதனை அளவில் இருப்பதால் நிறைய வசதிகள் பின்னர் வரலாம்.

# பேஸ்புக் சாட்டில் STICKER வசதி – தற்போது கணினிகளுக்கும்

Freedomuserteam.blogspot.com

பிரபு கிருஷ்ணா



அடிக்கடி புது புது வசதிகளை அறிமுகப்படுத்தி நம்மை கவர்வதில் பேஸ்புக்கிற்கு நிகர் அதுவே. அதன் தற்போதைய அறிமுகம் சாட் செய்யும் போது நண்பர்களுக்கு Sticker களை அனுப்பும் வசதி. கடந்த மாதமே மொபைல் பயனர்களுக்கு அறிமுகமான இந்த வசதி நேற்று முதல் கணினி பயனர்களுக்கும் கிடைத்துள்ளது. சாட்டில் அடிக்கடி வெறும் ஸ்மைலிகளை மட்டும் அனுப்பி போரடித்துவிட்டது என்று கூறுபவர்களுக்கு இந்த வசதி ஒரு புதிய அனுபவமாக இருக்கும். இதன் மூலம் ஏற்கனவே உள்ள குட்டி குட்டி படங்களை உங்கள் நண்பர்களுக்கு சாட் மூலம் அனுப்பலாம்.

நீங்கள் சாட் செய்யும் போது சாட் விண்டோவின் வலது கீழ் மூலையில் ஒரு ஸ்மைலி இருக்கும் அதை கிளிக் செய்தால் கீழே உள்ளது போல Stickers உங்களுக்கு வரும்.



எதை உங்கள் நண்பருக்கு அனுப்ப வேண்டுமோ அதன் மீது ஒரு கிளிக் செய்தால் போதும் அது உங்கள் நண்பருக்கு சென்று விடும்.




முதல் படத்தில் மேலே சாம்பல் நிறத்தில் (Gray Color) தெரிவாகி உள்ளவற்றிற்கு அடுத்து உள்ளவற்றை தெரிவு செய்தால் விதவிதமான Stickers உங்களுக்கு கிடைக்கும். கடைசியாக உள்ள ஐகானை கிளிக் செய்தால் Sticker Store க்கு செல்லலாம்.




இதில் Free என்பதை கிளிக் செய்தால் குறிப்பிட்ட Sticker உங்கள் சாட்டில் சேர்ந்து விடும். அதன் பின் அவற்றை உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் அனுப்பலாம். தற்போது அனைத்து Sticker களும் இலவசமாக கிடைக்கின்றன.

## புது நுட்பம் - தொடர்

பிரபு கிருஷ்ணா

### MICROMAX CANVAS 4 A210 SPECIFICATIONS



| | |
|---|---|
| **Operating System** | Android 4.2.1 Jelly Bean |
| **Display** | 5.5 inch (1280 x 720 pixels) TRU-IPS HD capacitive touch screen |
| **Dual Sim** | Yes, Dual Sim, GSM+GSM and Dual Standby |
| **Processor** | 1.2 GHz MediaTek 6589 Quad Core processor |
| **RAM** | 1 GB RAM |
| **Internal Memory** | 16 GB Internal Memory |
| **External Memory** | microSD, up to 32 GB |
| **Camera** | Rear Camera: 13 MP, 4128 x 3096 pixels, autofocus, LED flash, Full HD Recording |
| | Front Camera: 5 MP |
| **Battery** | 2000 mAh battery |
| **Features** | 3G, WiFi 802.11 b/g/n, Bluetooth, GPS, Java, Micro USB 2.0 connector |

## SAMSUNG GALAXY S4 MINI SPECIFICATIONS




| | |
|---|---|
| **Operating System** | Android OS, v4.2.2 (Jelly Bean) |
| **Display** | 4.3 inch (540 x 960 pixels) Super AMOLED capacitive touchscreen |
| **Processor** | 1.7 GHz Krait dual-core processor |
| **RAM** | 1.5 GB RAM |
| **Internal Memory** | 8 GB Internal Memory (5 GB user memory) |
| **External Memory** | microSD, up to 64 GB |
| **Camera** | Rear Camera: 8 MP, 3264 x 2448 pixels, autofocus, LED flash |
| | Front Camera: 1.9 MP |

| | |
|---|---|
| **Battery** | Li-Ion 1900 mAh Battery |
| **Features** | 3G, WiFi 802.11 b/g/n, Bluetooth, GPS, Java, Micro USB 2.0 connector |

**கற்போம் Review:**

கொடுக்கும் விலைக்கு 1.5 GB RAM தவிர மற்றவை அனைத்தும் குறைவானவை தான். 1 GB RAM உடன் வரும் Samsung Galaxy S3 இதை விட சிறந்த போன். இரண்டில் எது சிறந்தது என்று இங்கே காணலாம்.

## SAMSUNG GALAXY TAB 3 T211 (7 INCH) SPECIFICATIONS




இந்த Tablet 7 inch TFT capacitive touch screen, Android 4.1 (Jelly Bean) OS, 3 MP rear camera, 1.2 GHz Dual-core Processor, 1GB RAM மற்றும் 4000 mAh Li-Ion battery போன்ற வசதிகளுடன் வருகிறது. மிக முக்கியமாக இந்த Tablet,

Voice Calling Support உடன் வருகிறது. இதன் விலை Rs. 17,745 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **Operating System** | Android OS, v4.1 (Jelly Bean) |
| **Display** | 7 inch (600 x 1024 pixels) TFT capacitive touch screen |
| **Sim Card** | Yes Comes with Voice Calling support |
| **Processor** | 1.2 GHz Dual-core Processor |
| **RAM** | 1GB RAM |
| **Internal Memory** | 8/16 GB Internal Memory |
| **External Memory** | microSD, up to 64 GB |
| **Camera** | 3 MP rear camera and 1.3 MP front camera |
| **Battery** | 4000 mAh Li-Ion battery |
| **Features** | 3G, WiFi 802.11 b/g/n, Bluetooth, GPS, Java, Micro USB 2.0 connector |

## SAMSUNG GALAXY TAB 3 T310 (8 INCH) SPECIFICATIONS



இந்த Tablet 8 inch TFT capacitive touch screen, Android 4.2.2 (Jelly Bean) OS, 5 MP rear camera, 1.5 GHz Dual-core Processor, 1.5 GB RAM மற்றும் 4550 mAh Li-Ion battery போன்ற வசதிகளுடன் வருகிறது. இது Wi-Fi Only மாடல். இதில் Sim Card சப்போர்ட் கிடையாது. இதன் விலை Rs. 21945 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **Operating System** | Android OS, v4.2.2 (Jelly Bean) |
| **Display** | 8 inch (800 x 1280 pixels) TFT capacitive touch screen |
| **Sim Card** | No |
| **Processor** | 1.5 GHz Dual-core Processor |

| | |
|---|---|
| **RAM** | 1.5 GB RAM |
| **Internal Memory** | 16 GB Internal Memory |
| **External Memory** | microSD, up to 64 GB |
| **Camera** | 5 MP rear camera with LED flash and 1.3 MP front camera |
| **Battery** | Non-removable 4450 mAh Li-Ion battery |
| **Features** | Bluetooth, Wifi, GPS, Java and microUSB v2.0 |

## SAMSUNG GALAXY TAB 3 T311 (8 INCH) SPECIFICATIONS




Freedomusertech.blogspot.com

இந்த Tablet 8 inch TFT capacitive touch screen, Android 4.2.2 (Jelly Bean) OS, 5 MP rear camera, 1.5 GHz Dual-core Processor, 1.5 GB RAM மற்றும் 4550 mAh Li-Ion

battery போன்ற வசதிகளுடன் வருகிறது. இந்த Tablet, Voice Calling Support உடன் வருகிறது. இதன் விலை Rs. 21945 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **Operating System** | Android OS, v4.2.2 (Jelly Bean) |
| **Display** | 8 inch (800 x 1280 pixels) TFT capacitive touch screen |
| **Sim Card** | Yes, Sim card support (Voice communication, SMS and MMS support) |
| **Processor** | 1.5 GHz Dual-core Processor |
| **RAM** | 1.5 GB RAM |
| **Internal Memory** | 16 GB Internal Memory |
| **External Memory** | microSD, up to 64 GB |
| **Camera** | 5 MP rear camera with LED flash and 1.3 MP front camera |
| **Battery** | Non-removable 4450 mAh Li-Ion battery |
| **Features** | 3G, Bluetooth, Wifi, GPS, Java and microUSB v2.0 |

# பத்து நிமிடத்தில் WINDOWS XP INSTALL செய்யலாம்

பிரபு கிருஷ்ணா

Windows XP நம்மவர்கள் அதிகம் பயன்படுத்தும் OS. என்னதான் windows 7, Windows 8 வந்துவிட்ட போதிலும் இதை நாம் மறக்கவில்லை. எப்போதும் OS இன்ஸ்டால் பண்ணுவதற்க்கு நமக்கு அதிகபட்சம் 2 மணி நேரம் ஆகக் கூடும். இதை பத்து நிமிடத்தில் முடித்தால் எப்படி இருக்கும். வாங்க முடிப்போம்.

- OS cd யை Insnnsert செய்து ஃபார்மட் ஸ்டெப் முடிக்கவும்.
- இப்போது உங்கள் கம்ப்யூட்டர் ரீஸ்டார்ட் ஆகும்.

இப்போது கீழே உள்ளது போல டெஸ்க்டாப்பில் வரும்.




- இப்போது command Prompt இல் சிறு வேலை உள்ளது.

- Shift F10 ஐ பிரஸ் செய்வதன் மூலம் command Prompt க்கு வரலாம்.
- இங்கு “taskmgr” என டைப் செய்வதன் மூலம் “task Manager” க்கு வரலாம்.

அது கீழே உள்ளது போல தோன்றும்.
(Processes பகுதி. )




- இங்கு Setup.exe என்பதை நீங்கள் காணலாம்,
- அதனைRight click செய்யவும் அதில் Set priority –> real time என்பதை தெரிவு செய்யவும்.
- அவ்வளவு தான் இனி பத்து நிமிடத்தில் OS Install ஆகிவிடும்.

# GOOGLE CALENDAR சில பயனுள்ள குறிப்புகள்

பிரபு கிருஷ்ணா



Google Calendar என்பது இணையதள பயனர்கள் பலரும் அறிந்த ஒன்றுதான். இருந்தும் இது தெரியாதவர்களுக்கு.எப்படி ஒரு Event உருவாக்குவது, நம் போனுக்கு SMS அனுப்ப Google calendar ஐ எப்படி பயன்படுத்துவது என இதில் பார்ப்போம்.

**முதலில் Google Calender பற்றி சிறு குறிப்பு:**

Google calendar ஆண்டு 2006 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகிறது. பலவிதமான remainder பயன்பாடுகளுக்கு இது வாசகர்களால் பயன்படுத்தப்படுகிறது. SMS, இமெயில் என இரண்டிலும் உங்கள் முக்கியமான வேலைகளை நினைவு படுத்த இதை பயன்படுத்த முடியும்.

Google Calender Link: http://calendar.google.com/

இதில் நீங்கள் உங்கள் ஜிமெய்ல் கணக்கை பயன்படுத்தியே நுழைந்து கொள்ளலாம். அல்லது ஒரு Google account இருந்தாலே போதும்.

நீங்கள் புதியவராக இருந்தால் Welcome to Google Calendarஎன்ற பக்கத்தை முதலில் நிரப்பவும். இதில் நீங்கள் தற்போது இருக்கும் நாட்டினை குறிப்பிடவும். இப்போது calendar பகுதிக்கு நீங்கள் வந்து விடுவீர்கள். இதன் வலது மேல் மூலையில் calendar view தெரிவு செய்து கொள்ளவும்(Day,week,month,.. ).




இதில் சிவப்பு நிறத்தில் வட்டமிடப்பட்டுள்ள settings பகுதிக்கு செல்லவும். இதில்தான் உங்களுக்கு தேவையான செட்டிங்க்களை நீங்கள் உருவாக வேண்டும்.

இப்போது வரும் புதிய பகுதியில் "General" என்பதை தெரிவு செய்யவும். இதில் உங்களுக்கு ஏற்ற செட்டிங்களை மாற்றவும். முக்கியமாக நாடு, time zone போன்றவை. இதை இப்போது save செய்து விடவும்.

இப்போது இதே settings வழியாக "calendar" என்ற பகுதிக்கு வரவும். இதில் default ஆக உள்ளவற்றை மாற்ற விரும்பினால் மாற்றிக் கொள்ளவும். NOTIFICATIONS நேரம், காலம் கூட மாற்றிக் கொள்ளலாம்.

Share வசதி மூலம் உங்கள் calendar ஐ வேறு இமெயில் உடன் share செய்து கொள்ளலாம். அலுவலக பணிகளுக்கு இது உதவியாக இருக்கும்.

மேலும் இந்த பகுதியில் உள்ள Browse interesting calendars » என்பதன் மூலம் உங்களுக்கு தேவையான Holidays , Cricket match, என மேலும் பலவற்றை subscribe செய்து கொள்ளலாம். இதில் உங்களுக்கு விருப்பமானதை Subscribe செய்யும் போது அது உங்கள் Calendar இல் Add ஆகிவிடும்.

இப்போது அடுத்த பகுதியான “Mobile Setup” க்கு வரவும். இதில் உங்கள் நாடு, மொபைல் எண் கொடுத்து Verification code வாயிலாக உங்கள் மொபைல் எண்ணை பதிவு செய்து கொள்ளவும்.

“Labs” என்ற பகுதியில் உங்களுக்கு விருப்பமானதை Enable செய்து கொள்ளவும்.

இவற்றை save செய்த பின் main calendar பகுதிக்கு வரவும். இதில் ஏதாவது ஒரு தேதி மீது கிளிக் செய்தாலே Event/Task தோன்றுவதை காணலாம்.




Event பெயர் கொடுத்தவுடன் Create Event என்பதை கொடுத்து விடவும். பின்னர் Save ஆன Event பெயரை கிளிக் செய்து Edit Event Details கொடுக்கவும். இப்போது வரும் பகுதியில் event Details குறிப்பிடவும். இதில் Repeat என்பதை தெரிவு செய்து உங்களுக்கு ஏற்றார் போல இதே event ஐ மீண்டும் Repeat செய்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு நண்பரின் பிறந்த நாள் ஆக இருந்தால் வருடத்துக்கு ஒரு முறை. இதே போல மாதம், வாரம் நிகழ்ச்சிகளுக்கு என, எதை வேண்டுமானாலும் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

இப்போது கீழே Find Time என்ற இடத்தில் ஏதேனும் ஒரு நேர இடைவெளியை தெரிவு செய்யவும். (like 1 to 3 , 1.30 to 2.30 ). இது தேதி குறிப்பிட்டுள்ள இடத்தில் add ஆகிவிடும். இப்போது Save கொடுக்க வேண்டாம். மாறாக Event Details வரவும்.

இதில் Remainder என்ற இடத்தில் Remainder எதன் வழியாக பெற வேண்டும் என்பதை கொடுக்கவும். Email,Pop up,SMSஇதில் ஏதேனும் ஒன்றை கொடுக்கவும். எந்த நேரம் என்பதை கூட இதில் கொடுக்கலாம்.குறிப்பிட்ட நேரத்தில் உங்களுக்கு SMS, or Mail (நீங்கள் தெரிவு செய்தது) வந்து சேரும்.

இப்போது Save செய்து விடவும்.

மாற்றி ஏதாவது கொடுத்து விட்டால் event மீது வைத்து ஒரு கிளிக் செய்து அந்த Event ஐ Delete செய்து விடலாம்.




# தமிழில் போட்டோஷாப் - 8

கான்

Please send your comments to
mdkhan@gmail.com

# போட்டோஷாப் பாடம் 31










முதலில் (1) WELCOME என்று டைப் செய்துகொள்ளுங்கள். பிறகு (2) Select தலைப்பில் உள்ள Load Selection என்பதை கிளிக் செய்யுங்கள். அடுத்து வரும் தட்டில் (3) OK பட்டனை கிளிக் செய்யுங்கள். உடனே (4) WELCOME என்ற எழுத்தை சுற்றி நீர்கோடுகள் வந்ததுபோல் செலெக்ட் ஆகி இருக்கும். அடுத்து (5) Edit சென்று Copy என்பதை கிளிக் செய்யுங்கள். பிறகு அதே Edit ல் Paste என்பதை கிளிக் செய்யுங்கள்.










அடுத்து (6) Edit தலைப்பிற்க்கு சென்று Transform > Flip Vertical என்பதை கிளிக் செய்யுங்கள். உடனே நீங்கள் பேஸ்ட் செய்த WELCOME என்ற எழுத்து மட்டும் தலைகீழாக மாறி இருக்கும். அந்த எழுத்தை மட்டும் (7) கீழே காண்பதுபோல் முதலாவதாக டைப் செய்த WELCOME எழுத்துக்கு கீழே சரியாக பொருத்துங்கள்.













பிறகு (8) Edit > Transform சென்று Distort என்பதை கிளிக் செய்துவிட்டு நீங்கள் கீழே தலைகீழாக வைத்த WELCOME என்ற எழுத்த்தின் கீழ் பகுதியை மட்டும் இரண்டு பக்கமும் ஓரங்களை மவுஸ் மூலம் இழுத்து பெரிய அளவில் மாற்றுங்கள். அடுத்து அந்த எழுத்தில் வைத்து வலது பக்கம் கிளிக் செய்து Blending Option சென்று அந்த தலைகீழான எழுத்தை மட்டும் டார்க் கலராக மாற்றிக்கொள்ளுங்கள். அவ்வளவுதான்.




இந்த Distort உதவியோடு பின்பக்க நிழல் உருவாக்கிய எழுத்துக்கள்.




http://tamilcomputertips.blogspot.com

Please send your comments to
mdkhan@gmail.com

# போட்டோசாப் பாடம் 32




## உங்களுக்கு விருப்பமான வால்பேப்பரின் டிசைனை உங்கள் எழுத்துக்கு கொண்டு வருவது எப்படி ?

http://tamilcomputertips.blogspot.com




முதலில் உங்களுக்கு விருப்பமான வால் பேப்பரில் நீங்கள் விரும்பும் எழுத்தை டைப் செய்துகொள்ளுங்கள்.

பிறகு Select தலைப்புக்கு சென்று Load Selection என்பதை கிளிக் செய்யுங்கள். உடனே உங்கள் எழுத்து முழுவதும் செலெக்ட் ஆனதுபோல் நீர் கோடுகள் வந்துவிடும்.

http://tamilcomputertips.blogspot.com






பிறகு Eraser Tool ஐ கிளிக் செய்துவிட்டு நீங்கள் டைப் செய்த எழுத்தின் மேல் கிளிக் செய்யுங்கள். உடனே இங்கு காண்பதுபோல் ஒரு டிஸ்பிளே வரும். இதில் OK என்பதை கிளிக் செய்யுங்கள்.






பிறகு உங்கள் எழுத்தில் உள்ள கலர்களை அந்த Eraser டூலின் உதவியோயோடு அழித்துவிடுங்கள். அடுத்து Move Tool ஐ கிளிக் செய்துவிட்டு உங்கள் எழுத்தின் மேல் மவுசை வைத்து வலதுபக்கம் கிளிக் செய்து Background என்பதை செலெக்ட் செய்யுங்கள்.




http://tamilcomputertips.blogspot.com







அடுத்ததாக Edit தலைப்புக்கு சென்று Copy என்பதை கிளிக் செய்துவிட்டு பிறகு மறுபடியும் Edit தலைப்பில் Paste என்பதை கிளிக் செய்யுங்கள்.

http://tamilcomputertips.blogspot.com

அடுத்து Move Tool முலம் உங்கள் எழுத்தை வேறு இடத்துக்கு மவுசின் உதவியோடு கொண்டு செல்லுங்கள்.




http://tamilcomputertips.blogspot.com

இனி அந்த எழுத்தின் மேல் உங்கள் மவுசை வைத்து வலது பக்கம் கிளிக் செய்து Blending Options சென்று உங்கள் விருப்பம்போல் உங்கள் எழுத்துக்களுக்கு ஸ்டைல் டிசைன் கொடுத்துக்கொள்ளுங்கள்.



Please send your comments to
mdkhan@gmail.com

# போட்டோசாப் பாடம் 33




## அழகிய கோல்டு கலரில் எழுத்துக்களை மாற்றுவது எப்படி ?

கான்

முதலில் உங்கள் பெயரை டைப் செய்துகொண்டு பிறகு எதாவது ஒரு செலெக்சன் டூலை கிளிக் செய்துகொண்டு நீங்கள் டைப் செய்த பெயரின் மேல் மவுசை வைத்து வலதுபக்கம் கிளிக் செய்து Blending Option சென்று Layer Style என்ற கீழ் காணும் தட்டை ஓப்பன் செய்துகொள்ளுங்கள்.

பிறகு இந்த Layer Style தட்டில் Color Overlay என்பதை (1) செலெக்ட் செய்து 2 ல் குறிப்பிட்ட இடத்தில் கலரை டபுள் கிளிக் செய்து 3ல் குறிப்பிட இடத்தில் FFBA00 என்று டைப் செய்து ஒகே செய்துவிடுங்கள். உடனே உங்கள் பெயர் கோல்டு கலரில் வந்துவிடும்.




இந்த இடத்தில் டைப் செய்ய முடியவில்லை என்றால் ஒரு நோட் பேடில் FFBA00 என்று டைப் செய்து காப்பி எடுத்து இந்த இதத்தில் பேஸ்ட் செய்யுங்கள்.

கான்

http://tamilpctraining.blogspot.com




பிறகு அதே Blending Option ல் 4 ல் குறிப்பிட்ட Bevel and Emboss என்ற இடத்தை டிக் செய்து 5, 6, 7 இடத்தில் உள்ளதுபோல் மாற்றம் செய்து பிறகு 8, 9 ல் குறிப்பிடதுபோல் அந்த கலருக்கு டைப் செய்து ஓகே செய்யுங்கள். உடனே உங்கள் பெயரும் இதுபோல அழகிய கோல்டுகலரில் வந்துவிடும்.



| கற்போம் இதழில் பகிரப்படும் பதிவுகளின் உரிமை முழுக்க முழுக்க இவர்களை சார்ந்தது.<br>(குறிப்பிட்ட கட்டுரை எழுதிய பதிவரின் பெயர் கட்டுரையின் தலைப்பின் கீழ் இருக்கும்) | |
|---|---|
| வந்தேமாதரம் சசி | பிளாக்கர் நண்பன் அப்துல் பாசித் |
| பொன்மலர் | தமிழ்CPU ராஜ்குமார் |
| GNU/Linux கதிர்வேல் | கௌதம் இன்போடெக் வடிவேலன் |
| தமிழ்கிழம் ஜெயச்சந்திரன் | தமிழ்வாசி பிரகாஷ் |
| தமிழ் கீக்ஸ் | காரணம் ஆயிரம் கார்த்திகேயன் |
| Pangusanthai-eLearn தேவராஜ் | தங்கம்பழனி |
| கணினி கல்லூரி பவர்தாசன் | வடகரை தாரிக் |
| ஆளுங்க அருண் பழனியப்பன் | தமிழர்கள் விக்னேஷ் |
| காகிதம் எர்னஸ்டோ பாலாஜி | கடற்கரை விஜயன் |
| தமிழ் கம்ப்யூட்டர் டிப்ஸ் கான் | ரவி நாக் |
| மற்றும்<br>கற்போம் | |



1. பதிவுகள் அனைத்தும் உரிய பதிவர்களுக்கு சொந்தமானது.
2. விளம்பரங்களுக்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை.
3. பதிவுகளை படிக்க, பகிர மட்டுமே கொடுக்கிறோம். இதனை உங்கள் வலைப்பூக்களில் காபி, பேஸ்ட் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.


கற்போம் குழு

பிரபு கிருஷ்ணா

சூர்யபிரகாஷ்

தொடர்புக்கு:

தளம் : www.karpom.com

மின்னஞ்சல் முகவரி: admin@karpom.com